# சின்னஞ்சிறு விளம்பரம்

## ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூடேர், 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம்.
[இ-0798]

## இடமாற்றம்

வேலணை வைத்தியர் சி இராசரத்தினம் 121, 2ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் சிகிச்சையளித்தொடர்கிறார். சகல நோயாளர்களும் வழமைபோல் சிகிச்சை பெறலாம். இடம்பெயர்ந்தோருக்கு சலுகை அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்படும்.
(18590)

## தேவை

சமூக சேவையில் நாட்டமுள்ள, தங்கிப் பணிபுரியக்கூடிய ஓய்வு பெற்றவர் தேவை. உணவு, இருப்பிட வசதியுடன் ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படும். ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் விரும்பத்தக்கது. 10-12-91 க்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 827, மே/பா உதயன்.
(4408)

# தாக்குதலை தடுக்கவே ஊரடங்காம்

மாவீரர் வாரத்தை பயன்படுத்தி ஆயுதப்படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவதை தடுக்கும் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே வன்னிப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்பட்டதாக வவுனியா ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது வன்னிப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.
(இ-த)

# கலைஞர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ: 26

இன்று செவ்வாய் இரவு 12.00 மணிக்கு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலகத்தில் நடைபெறும் தியாகச் சுடரேற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், கவிஞர்களுக்கும், அறிஞர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

வருகைதரும் கலைஞர்களுக்கான வசதிகள் யாவும் தலைமைச் செயலகத்தில் செய்யப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
(இ)

# ஊர்காவற்றுறை தபால்கள் விநியோகமின்றி தேக்கம்

யாழ்ப்பாணம், நவ: 26

ஊர்காவற்றுறை தபால் அலுவலகத்திற்கு உட்பட்ட சரம்பன் கிழக்கு, சரம்பன் மேற்கு, கருவில், புளியங்கூடல், நாரந்தனை வடக்கு, நாரந்தனை தெற்கு, நாரந்தனை மேற்கு, நாரந்தனை மத்தி மற்றும் ஊர்காவற்றுறை நகரப்பகுதி ஆகியவற்றுக்கான தபால்கள் பெரும் அளவில் யாழ்ப்பாணம் பிரதம தபால் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை வந்து பெற்றுக் கொள்ளுமாறு ஊர்காவற்றுறை தபால அதிபர் கோரி உள்ளார்.
(இ)

# பரமக்குடியில் ஒருவர் கைது!

சென்னை, நவ: 26

தீவிரவாத அமைப்பு ஒன்றைச் சேர்ந்தவர் என்று கூறப்படும் கண்ணுச்சாமி என்பவர் கடந்த சனிக்கிழமை பரமக்குடியில் 'கியூ' பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் இலங்கைத் தமிழ் போராளிகளுடனும் நக்ஸலைட்டுகளுடனும் தொடர்பு கொண்டிருந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரிடமிருந்து டிரான்ஸ்மிட்டர், டிரான்ஸ் ரிசீவர், வோக்கி-டோக்கி, 99 ஜெலட்டின் குச்சிகள், 50 வெடிக்க வைக்கும் கருவிகள் ஆகியன கைப்பற்றப்பட்டனவாம்.
(ஒ-த)

# நீரிழிவு பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 26

எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு நீரிழிவு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். நல்லூர் லயன்ஸ் கழகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.
(இ)

## 31st Day Rememberence

### S. PANCHALINGAM

(Chief Accountant Stassen Internation Ltd.)

Called to rest on 26 th Oct. at 78/6 W. A. Silva Mawatte - Colombo-6

Some People make a Fortune,
Some People rise to Fame,
But you with your Kindness and Love
Written your name in our Hearts,
Thus, you became immortal in this Mortal World

Fondly Remembered:
By Kulendran, Shantini, Dhakshy, Harishun and Rumeya.

'Ratna Villa',
Chankanai.
(C-1012)

## ஆசிரியர் தேவை

யாழ் நகரிலுள்ள கலை அக்கடமி ஒன்றிற்கு வாய்ப்பாட்டு பயிற்றுவிக்கக்கூடிய ஆசிரியர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்; 15-12-91 க்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பவும்.

இல. 826, மே/பா: உதயன், யாழ்ப்பாணம்.
[இ-1010]

# க. பொ. த. சாதாரணதரம் பொதுப் பரீட்சை

| திகதி | முற்பகல் | பிற்பகல் |
|---|---|---|
| 30-11-1991 சனி | ஆங்கில மொழி I 08-30 — 09-30<br>ஆங்கில மொழி II 09-30 — 11-30 | கணிதம் I 12-30 — 01-30<br>கணிதம் II 01-30 — 04-30 |
| 01-12-1991 ஞாயிறு | விஞ்ஞானம் I 08 00 — 09 00<br>விஞ்ஞானம் II 09 00 — 12-00 | வரலாறும் சமூகக்கல்வியும் I 01-00—02-00<br>வரலாறும் சமூகக்கல்வியும் II 02-00—05-00 |
| 07-12-1991 சனி | தமிழ் மொழியும் இலக்கியமும் I 08-30 — 09-15<br>தமிழ் மொழியும் இலக்கியமும் II 09-15 — 11-15 | தமிழ் மொழியும் இலக்கியமும் III 12-30—02-30 |

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தமது அனுமதி அட்டைகளை 27 - 11 - 1991 அன்று பெற்றுக் கொள்ளவும்.

பரீட்சைப் பகுதி


**யூனிவேர்சல்** கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
[இ-0931]

நீங்கள் விரும்பும் வகையில் முழுமையான கம்பியூட்டர் கல்வி எதுவாயினும் பயில வேண்டுமா?

எப்பொழுதும் தொடர்பு கொள்ளலாம்

நிர்வாகி:
யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[இ-0935]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22 - 12 - 1942

மறைவு: 26 - 11 - 1990

திதி: 15 - 12 - 1991

அமரர்

## கந்தசாமி சிதம்பரப்பிள்ளை

(முன்னைநாள் உப அதிபர், வட்டு இந்துக் கல்லூரி)

அன்புக்குரியீர், அமர நிலை பெற்றீர்
துன்ப நினைவின் தொடர்ந்த இருள் சூழும் -
நெஞ்சம் உடைந்தோம்; நெடியதோர் ஆண்டாயும்
மிஞ்சு துயர் நீங்கி மீளும் வழி அறியோம்.

உமது ஆத்ம சாந்திக்காக நாடும்
மனைவி: — நித்தியவாணி,
பிள்ளைகள்: — சேந்தன், அம்பிகா,
மற்றும் உறவினர்கள்.

வட்டு: மேற்கு,
வட்டுக்கோட்டை.
(18868)

நிதித்துறையில் நாணயம் மிக்க நண்பன்

★ ஷப்றா ★

வளமான எதிர்காலத்துக்கு ஷப்றாவுடன் இணைந்து சேமியுங்கள்

ஷப்றா

யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,

2 ஆர். ஏ. டி. மெல் மாவத்தை, கொழும்பு 4. தொலைபேசி: 580080 - 90

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வவுனியாவில் அபிவிருத்தியா?

வார இறுதியில் வவுனியாவுக்கு அமைச்சர் 'கூட்டம்' ஒன்று விஜயம் செய்திருந்தது. அந்தக் கூட்டத்தில் பதினைந்துக்கும் மேற்பட்ட அமைச்சர்கள் வந்திருந்தனர்.

வவுனியாவை அபிவிருத்தி செய்வதில் அரசுக்கு உண்டான திடீர் ''ஆசை''யின் பிரதிபலிப்பே இந்தத் தடல் புடல்கள் எல்லாம். ரயில், பஸ், போக்குவரத்து வசதி; மின்சார வசதி; தொலைபேசி வசதி; ஆகிய சாதாரண வசதிகள் குறித்தே அமைச்சர்கள் விஜயத்தின்போது ஆராயப்பட்டது.

நீண்டகால - பெருமளவிலான, விவசாயத் திட்டம் எதுவும் குறித்தோ அல்லது பெரும் கைத்தொழில் திட்டம் குறித்தோ அல்லது குறிப்பிடக்கூடிய வேறு அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியோ அமைச்சர்கள் ஆராய்ந்ததாகத் தகவல் இல்லை. இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது குறித்தேனும் பெரிதாக ஆராயப்படவில்லை.

மொத்தத்தில் வடக்கின்வாசலான வவுனியாவில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என்பது புலனாகிறது.

வவுனியாவில் சிவில் நிர்வாகத்தை உண்டாக்குவதற்கு தனது சக்திக்கு உட்பட்ட சகலவற்றையும் செய்வதற்கு அரசு முயற்சித்து வருவதற்குக் காரணம் இருக்கிறது. ஏற்கனவே திருமலை, அம்பாறை மாவட்டங்களில் செய்தது போல, தமிழ்ப் பிரதேசத்தின் எல்லை மாவட்டமான வவுனியாவிலும் இன விகிதாசாரத்தை மாற்றித் தமிழர்களைச் சிறுபான்மையினராக்கும் திட்டத்தை அரசு மறந்து விட்டதாகச் சொல்ல முடியாது.

வவுனியா மாவட்டத்தின் வடக்குப் பிரதேசம் சிங்களப் பகுதியாக மாறி, தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்படும் அளவுக்கு தமிழர் மண்ணைக் கபளீகரம் செய்த போதிலும், சிங்களப் பேரினவாதம் இன்னும் திருப்தி படவில்லை என்பதைத் தமிழர்கள் மறந்து விடக்கூடாது.

ஐம்பதுகளில் பதவியா போன்ற எல்லைப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன எனினும் அரசாங்கம் நினைத்தது போலத் தனது தமிழ் மண் அபகரிப்புத் திட்டத்தில் நூறு வீதம் வெற்றி காண முடியவில்லை. விட்ட குறை, தொட்டகுறை என்று அந்தத் திட்டத்தைத் தொடரும் ஆசை அரசுக்கு இப்போது வந்திருக்கிறது!

அதனைச் செய்வதற்கு உரிய தள வசதிகளுடன் சிவில் நிர்வாகம் மீளமைக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. அதுவே அபிவிருத்தி என்ற மேனி மினுக்கு வார்த்தையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள அமர்க்களங்கள் என்று கருத வேண்டியுள்ளது.

வவுனியாவின் ஒரு பகுதியைத் தனது கட்டுப்பாட்டில வைத்திருந்த போதிலும், முழு மாவட்டத்திலும் அரசினால சிவில் நிர்வாகத்தை நடத்த முடியவில்லை. இதனைச் சிங்கள மக்களிடம் இருந்து மறைத்து, வவுனியாவில் எல்லாம் நானே என்று அரசு காட்டுவதற்கான முயற்சியாகவும் இந்த அபிவிருத்தி உச்சாடனம் அமையக்கூடும்.

எதற்கும் இது குறித்து தமிழ் மக்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது அவசியம்.

---

### ஜி. சீ. ஈ. சாதாரண தர மாணவரின்

## அடையாள அட்டைகளை தாமதமின்றி வழங்க ஏற்பாடு

கொழும்பு நவ. 26

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ள ஜி. சீ. ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள், டிசம்பர் 2ஆம் திகதிக்குள் அதனைப் பெறத் தவறினால் அவர்கள் சகல விவரங்களுடனும் ஆட்பதிவுத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

இப்படி ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவரின் நன்மை கருதி 16 வயதுக்கும், 18 வயதுக்கும் இடைப்பட்டவர்களின் விண்ணப்பங்களில் உடனடிக் கவனம் செலுத்தப்படுவதாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் 9ஆம் திகதி ஆரம்பமாவது தெரிந்ததே. (இ-த)

## வடபகுதி மாணவர்கள் கொழும்பில் தோற்ற வசதி

வடமராட்சித் திகதியிலிருந்து கொழும்பு சென்றுள்ள ஜி. சீ. ஈ. சாதாரணதர வகுப்பு மாணவர்களின் நன்மை கருதி கொழும்பில் விசேட பரீட்சை மண்டபங்கள் அமைக்கப்படும்.

இப்படி பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. [இ-த]

### ஊர்காவற்றுறையில்

## புலிகள் புதைத்த கண்ணியில் சிக்கி டிரக் வாகனம் சேதம்

கொழும்பு, நவ. 26

ஊர்காவற்றுறையில் கண்ணி வெடியில் அகப்பட்ட இராணுவ டிரக் ஒன்று பலத்த சேதம் அடைந்தது என்றும் டிரக்கில் சென்ற இராணுவ வீரர்களில் 3 பேர் காயம் அடைந்தனர் என்றும் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் முன்னர் புதைத்து வைத்த கண்ணி வெடியே இவ்வாறு வெடித்தது என்று இவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

சமீபத்தில் இச்சம்பவம் நடந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-த)

## மதம் பிடித்த 8 யானைகள்: ஜனாதிபதி பிரஸ்தாபம்

திருகோணமலை, நவ. 26

எம்மிடமும் 125 யானைகள் இருந்தன. இவை அனைத்தையும் நல்ல யானைகள் என்றே நான் நம்பினேன். ஆனால் அவற்றில் 8 யானைகள் மதம் பிடித்து எம்மையே தாக்க வந்தன. அப்போது இருபான்மைக் கட்சிகளே எமக்குப் பலமாக நின்று எம்மைப் பாதுகாத்தன.

கல்முனையில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினார்.

அம்பாறை மாவட்ட வயல் காணிகளில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவது சம்பந்தமாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் மகஜர் ஒன்றை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

அது பற்றிக் கருத்து தெரிவிக்கையிலேயே தம்மிடமிருந்த யானைகள் குறித்து ஜனாதிபதி பிரஸ்தாபித்தார்.

இந்த யானைகளைக் கொல்லாமல் காட்டுக்கு அனுப்பும்படி தாம் வன பரிபாலன திணைக்களத்தைக் கேட்டுள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார். (இ-த)

### கொள்ளையரிடம் ஏ. கே. 47 துப்பாக்கி

திருகோணமலை, நவ. 26

திருகோணமலை கிண்ணியாவில் பல ஆயுதக் கொள்ளைகளில் சம்பந்தப்பட்டனர் என்று சந்தேகிக்கப்படும் 4 பேர் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டனர்.

எம். எச். மொஹமட் உவைஸ் என்பவர் உட்பட பிரஸ்தாப 4 சந்தேக நபர்களிடமிருந்தும் 2 ஏ. கே. 47 ரக துப்பாக்கிகளும் 500 துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன என்று கூட்டுப்படை தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-த)

## யாழ்தேவி பயணிகளிடம் கொள்ளையடித்தோர் கைது

யாழ்தேவி பிரயாணிகளிடம் தங்க நகைகள் மற்றும், பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்து வந்த கோஷ்டி ஒன்றை கோட்டைப் பொலீஸார் கடந்த சனிக்கிழமை இரவு கோட்டை ரயில் நிலையப் பகுதியில் கைது செய்தனர்.

கொழும்பு வரும் வடபகுதி மக்களிடம் தம்மை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்று இவர்கள் கூறிக்கொண்டு அவர்களைச் சோதனையிடும் பாவனையில் பொருள்களைக் கொள்ளையடித்து வந்ததாகக் கூறப்படுகிறது. [இ-த]

## நாடு திரும்பும் அகதிகளுக்கு எய்ட்ஸ் நோய் பரிசோதனை

கொழும்பு, நவ. 26

இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகளுக்கு இறங்குதுறையில் வைத்து ''எய்ட்ஸ்'' நோய் பற்றிய பரிசோதனை நடத்தப்படும்.

உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் உரை நிகழ்த்திய ... இதனைத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---



## பிரபாகரனெனும் பெருவீரன்

| | | | |
|---|---|---|---|
| மாறாத | கொள்கையும் | மலைபோல | உறுதியும்; |
| | மானமே | பெரிதான | வாழ்வும், |
| மக்களின் | நேசமும் | மண்ணிலே | பாசமும், |
| | மாண்பு | தவறாத | போக்கும்; |
| ஆறாத | ஆர்வமும் | அசையாத | ஆண்மையும்; |
| | ஆற்றலே | வலுவான | உடலும், |
| ஆக்கமும் | ஊக்கமும் | நோக்கமும் | தமிழரின் |
| | அரசொன்றை | நிறுவு | திறனும், |
| பேறான | புலிப்படைப் | போராளிக் | கூட்டமும்; |
| | பேரறிஞர் | நட்பு | ரிமையும்; |
| பெரும்பற்றில் | நின்றுமே | அறம்பற்றி | நிற்கின்ற; |
| | பிறன்பழிக் | கஞ்சு | பண்பும்; |
| பெயராக | விளங்கிடப் | பிரபா | கரனெனும் |
| | பெருவீரன் | உருவாகி | வந்தான்; |
| பிறக்கின்ற | தமிழீழ | முயற்சியின் | உயர்ச்சியில் |
| | வீடுடன் | கொடியேற்றி | நிற்பான். |

• முருகனடியான்

[தலைவர் வே. பிரபாகரனின் 37 ஆவது பிறந்த தினம் இன்றாகும்]

## மாவீரர் வாரத்தை ஒட்டி பல்வேறு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், நவ. 26

மாவீரர் வாரத்தை ஒட்டி வடமராட்சிப் பகுதியில் பரவலாகக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இக் கூட்டங்களில் விடுதலைப்புலிகள் பிரமுகர்களின் பேச்சுக்களும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

தென்மராட்சிப் பச்சிலைப் பள்ளிப் பகுதிகளில் உள்ள அரச நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள், சந்தைகள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றில் மாவீரர் வார ஆரம்பத்தில் தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடைபெற்றன.

தெல்லிப்பளை பன்னாலைப் பகுதியிலும் மாவீரர் வார நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

தெல்லிப்பளையில் இருந்து மல்லாகம் வரை 5 வளைவுகளும், மல்லாகம் சந்தியில் இருந்து அளுக்கை வரை 3 வளைவுகளும், அளுக்கை சந்தியில் இருந்து அளவெட்டி வடக்கு சந்திவரை 3 வளைவுகளும், அம்பனையிலிருந்து தெல்லிப்பளைச் சந்திவரை 3 வளைவுகளும், அமைக்கப்பட்டுள்ளன. (த-117-165)

## இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் நவ. 26

மாவீரர் வாரத்தின் ஆறாவது நாளான இன்று 26 ஆம் திகதி தீபகத்திலிருந்து இடம் பெயர்ந்தோருக்கான கூட்டம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் மாவீரரின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படுவார்கள். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

★ யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள, மாவீரர் வார நிகழ்ச்சிகள் இன்று காலை 8-30 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

★ யாழ்ப்பாணம் கல்விக் கோட்டம் நடத்தும் மாவீரர் தின விழா இன்று காலை 9-30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

## மீட்புநிதி மீள பெறுவோர்

யாழ்ப்பாணம், நவ. 26

தமிழீழ மீட்புநிதி செலுத்தியோரில் கடன் மீளளிப்புப் பெறத் தெரிவான குடும்பங்களின் கடன் மீளளிப்புப் பத்திர இலக்கங்கள் உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாகத் தொடர்ந்து வெளிவருவது தெரிந்ததே. இன்று இறுதித் தொகுதி பட்டியல் வெளி வருகிறது.

### காரைநகர்

ஐப்பசி — 1991

கா/கா
30

கார்த்திகை

கா/கா
13

### யாழ்ப்பாணம்

ஆனி — 1991

யா/யா

| | | | |
|---|---|---|---|
| 233 | 537 | 1370 | 1439 |
| 1828 | 1994 | 2136 | 3611 |

### வேலணை

புரட்டாதி — 1991

வே/வே

| | | |
|---|---|---|
| 54 | 563 | 587 |

ஐப்பசி

வே/வே

| | | | |
|---|---|---|---|
| 03 | 189 | 885 | 954 |
| 1128 | | | |

கார்த்திகை

வே/வே

| | | | |
|---|---|---|---|
| 04 | 53 | 222 | 425 |
| 458 | | | |

(முற்றும்)

## பற்றறிகள் கடத்த முயற்சி

கொழும்பு, நவ. 26

பெருமளவிலான பெல்ரேசர் பற்றறிகளை வெளிச்சட்டத்தினுள் மறைத்து வைத்து வடபகுதிக்கு கொண்டு செல்ல முயன்ற நபர் ஒருவர் வவுனியா சர்வோதயம் சோதனை நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

23 ஆயிரத்து 40 பெல்ரேசர் பற்றறிகளையும், 11 பெயின்ற் டின்களையும், 5 பிளாஸ்ரிக் மீன் டின்களையும், 15 கொம்பவுண்ட் டின்களையும் இவரிடமிருந்து பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-த)

